**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

-------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும்

பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு ‘‘திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு’’ என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது. பொது பேரேடு, நாட்குறிப்பு முறைமையொன்று நிறுவகத்தின் நாட்குறிப்பு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் ஏனையவை போன்ற முக்கிய கணக்கீட்டு பதிவேடுகளின் பராமரிப்பு தொடர்பான சர்ச்சைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட முடியும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் 02 சொத்து வகைகளுக்குரிய நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுள் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் ரூபா 8,205,088 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட போதிலும் இன்னும் பயன்பாட்டிலுள்ளது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறுகள் மீளதிருத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மீளமதிப்பிடும் போது மேற்குறிப்பிடப்பட்ட சொத்து வகைகள் மீளமதிப்பிடப்படும். | நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 545,430 கிரயமான சொத்துக்களின் 15 உருப்படிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காட்டப்பட்டிருந்தது. அத்தகைய சொத்துக்கள் மதிப்பிடப்பட்ட போது சொத்துக்களானது ரூபா 514,039 பெறுமதியாக காட்டப்பட்டு கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. ஆகையால், சொத்துக்களானது கணக்குகளில் ரூபா 31,391 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது திருத்தப்படும். | கிரயத்தின் பெறுமதி சரியாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும் |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளிற்கான பாடநெறிக் கட்டணங்களுடன் தொடர்புடைய தவறுகளின் மீது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறைக்கு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆகையால், பற்றாக்குறை ரூபா 35,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது திருத்தப்படும். | மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவீனம் மாத்திரமே நிதிச் செயலாற்றல் கணக்கிற்கு சீராக்கஞ் செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கைகள்

இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கைகள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளும் இந்தத் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் | நேரொத்த அறிக்கைகளின் பிரகாரம் | வித்தியாசம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| பெறவேண்டிய பாடநெறி வருமானம் | 2,009,186 | 2,717,950 | 708,764 | பெறுகைகளை பதிவு செய்யத் தவறியமை, மாணவர்கள் பாடநெறியிலிருந்து விலகிச்சென்றமை மற்றும் அட்டுறு அடிப்படையில் பதிவேடுகளை தயாரிக்காமை போன்ற காரணங்கள் இந்த வித்தியாசத்திற்கு தாக்கமளித்திருந்தது. இந்த ஆண்டில் மேற்கூறப்பட்ட வித்தியாசத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடுகள் நாளதுவரையாக் கப்பட்ட மற்றும் சரியான முறையில் பேணப்பட வேண்டும். |
| நிலையான சொத்துக்கள் மீதான கிரயம் | 11,453,378 | 11,411,522 | 41,856 | அத்தகைய வித்தியாசங்கள் பரீட்சிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பதிவேடுகள் நாளதுவரையாக் கப்பட்ட மற்றும் சரியான முறையில் பேணப்பட வேண்டும். |
| நிலையான சொத்துக்கள் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீடுகள் | 8,667,740 | 8,638,680 | 29,060 | அத்தகைய வித்தியாசங்கள் பரீட்சிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பதிவேடுகள் நாளதுவரையாக் கப்பட்டு சரியான முறையில் பேணப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு வருடம் மற்றும் நான்கு வருடங்களை விஞ்சிய முறையே ரூபா 1,740,025 மற்றும் ரூபா 163,500 மீதிகளை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,241,921 தொகையான பெறவேண்டிய பாடநெறி வருமானம் காட்டப்பட்டிருந்தது. | ஒரு வருடத்தை விட குறைவான பாடநெறி கட்டணமானது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பாடநெறிகளுடன் தொர்புடையதுடன் பாடநெறி முடிவடைவதற்கு முன்னர் நிலுவைக்கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பாடநெறிக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,812,161 தொகையான அட்டுறுச் செலவீனங்களின் மீதியானது ஒரு வருடத்திற்கு அதிகமான ரூபா 228,900 மீதியையும் 3 வருடங்களிற்கு அதிகமான ரூபா 366,018 மீதியையும் உள்ளடக்கியுள்ளது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதியில் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் அறிவித்தலின்றி வெளிநாடு சென்றமையால் வேலையிலிருந்து வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 163,534 கடன் மீதி 2019 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவீடு வினைத்திறனாக மேற்கொள்ளப்படும். |

### 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி இணைக்கக் கூற்றின் பிரகாரம் 01 மாதத்திலிருந்து 34 மாதங்கள் வரையிலான வீச்சிலான காலப்பகுதியுடன் தொடர்புடைய ரூபா 1,279,435 கூட்டுத்தொகையான நேரடிச் செலவீனங்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் இனங்காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அந்த ரூபா 1,279,435 கூட்டுத்தொகையில் ரூபா 578,115 தொகையொன்று இனங்காணப்பட்டிருந்த அதேநேரம் ரூபா 701,319.80 தொகையொன்று நடைமுறையில் இருப்பதுடன் அந்தத் தொகையை எதிர்காலத்தில் இனங்காணபதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடிச் செலவீனங்களை உடனடியாக இனங்காண்பதற்கும் தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் 3 வங்கி நடைமுறைக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,792,569 ஆகும். ரூபா 7,805,185 தொடக்கம் ரூபா 14,312,156 வரையிலான மீதியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் விளைவற்றிருந்தது. | ரூபா 6 மில்லியன் தொகை 2018 செப்தெம்பர் இல் நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப்பட்டது. நிலையான வைப்புக்களில் இன்னும் அதிகமாகவுள்ள பணங்களை முதலிடுவதற்கு 2019 இல் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகமாகவுள்ள பணங்கள் முதலிடப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,165,398 பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,073,855 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 8,239,253 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கட்டணங்கள், தண்டப்பணங்கள் மற்றும் வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 3,239,284 ஆல் குறைவடைந்தமை, ரூபா 2,761,944 தொகையான ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் ரூபா 2,991,661 ஆல் அதிகரித்திருந்தமை போன்ற காரணங்கள் இந்தப் பின்னடைவிற்கு பெருமளவு தாக்கமளித்திருந்தது.

## 3. நிலைபேறுதகு அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ஐக்கிய இராச்சியங்களின் ''2030 நிகழ்ச்சித்திட்டம்'' தொடர்பில் நிறுவகம் கவனம் செலுத்தியது. எனினும், அத்தகைய இலக்குகளை அடைவதிலுள்ள நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள், எல்லைகள், மைல்கற்கள் மற்றும் இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் போன்றவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு இலக்கம் 04 இன் கீழான சமமான கற்கை சந்தர்ப்பங்களினை அனைவருக்கும் வழங்குவதற்கு பின்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>(i) மூன்று மொழிகளிலும் பாடநெறிகளை நடாத்துதல்.<br><br>(ii) பிராந்திய ரீதியில் பாடநெறிகள் நடாத்தப்படல்<br><br>(iii) சான்றிதழ் பாடநெறிகளிலிரந்து முனைவர் பட்டம் வரையிலும் அனைத்து வகைப்படுத்தல்களையும் மேவி பாடநெறிகள் நடாத்தப்பட்டது.<br><br>நிலைபெறுதகு அபிவிருத்தியின் பிரதான நோக்கமானது நீண்டகால கற்கைக்கு தேவையான திறன்களை வழங்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை என்ஐஎல்எல் தொடர்ச்சியாக நடாத்துவதாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பிரேரிக்கப்பட்ட எஸ்எல்கியூஎவ் உடன் இணங்க எங்களின் அனைத்து பாடநெறிகளையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எஸ்எல்கியூ இற்கு இணங்க பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் மற்றும் கலைப்பட்டம் (பீஜீஎல்ஐஎஸ் / எம்ஐஎஸ்எல்) போன்றவற்றிற்கான பாடத்திட்டம் 2018 இல் தயாரிக்கப்பட்டிருந்தது. என்ஐஎல்எஸ் இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்காலத்தில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை (கேபீஜ) உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபெறுதகு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் (கேபிஜ) போன்ற நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் அவை அமுல்படுத்த வேண்டும். |